
பக்கங்கள் 15+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

# யாழில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் மரணம்



யாழ்ப்பாணத்தில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 06 புதன்கிழமை 19.06.2024 அதிர்வு 324



# நாளை இலங்கைக்கு வருகிறார் ஜெய்சங்கர்

## பல தரப்பினருடனும் பேச்சு

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை இலங்கை வருகின்றார் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இலங்கை விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இருதரப்பு பங்குடைமையின் பரந்தளவான விடயங்கள் குறித்து இலங்கை தலைமைத்துவத்துடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புதிய அரசின் கீழ் வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் முதலாவது இரு தரப்பு விஜயம் இதுவாகும். 04

# ரணிலுடன் ஒப்பந்தம் செய்து விட்டு அவரை ஆதரிக்க வேண்டும் மொட்டு



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுக்க வேண்டும்.”

## இப்படி எஸ்.பி. ஆலோசனை

– இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தமது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவைப் பெயரிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் வருவார்கள், சிறு கட்சிகளும் இணையும். அவ்வாறு பெயரை அறிவிக்காவிட்டால் மாற்றம் எதுவும் நடக்காது.

எனவே, ராஜபக்ஷக்கள் ஒரு அடி பின் வாங்கி, நாடு பற்றி யோசித்து முடிவை எடுக்க வேண்டும். ரணிலை வேட்பாளராக அறிவிப்பது நல்லது. அதே போல் மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் முழு வீச்சுடன் செயற்பட வேண்டும்.

சிலவேளை ரணிலுக்குப் பதிலாக மற்றுமொரு வேட்பாளரை மொட்டுக் கட்சி நிறுத்தினால் அது சாதகமற்ற முடிவாகவே அமையும். மொட்டுக் கட்சி தோற்கும், ரணிலும் தோற்பார். சஜித் வெற்றி பெறுவார். ஜே.வி.பி. இரண்டாம் இடத்துக்கு வரக்கூடும்.” – என்றார்.







# யாழ். ஊடகர் பிரதீபனின் வீடு மீதான தாக்குதலுக்கு நீதி கோரி போராட்டம்!

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரின் வீடு மீது தாக்குதல் நடத்தி வாகனங்களுக்குத் தீ மூட்டிய சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி யாழ். நகரில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி, பத்தமேனி காளிகோயில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், நீதியான விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் எனக் கோரியுமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, தாக்குதல் சம்பவம் தொடர்பில், அச்சுவேலி, மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த மூவரை அச்சுவேலி பொலிஸார் நேற்று கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.











# திருகோணமலை மத்திய சந்தை வியாபாரிகள் இன்று போராட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மத்திய சந்தை கட்டடத் தொகுதி வியாபாரிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி திருகோணமலை நகர சபை வளாகம் வரை சென்றது.

தங்கள் வியாபாரத்தைச் சுதந்திர மாக மேற்கொள்ள இடமளிக்குமாறும், வீதி வியாபார நடவடிக்கைகளைத் தடை செய்யுமாறு கோரியும் ஆர்ப் பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

“திருகோணமலை நகர சபைக்கு மாதக் கட்டணம் செலுத்தி வருகின் றோம். ஆனால். வீதியோர வியாபாரி களை அனுமதித்து விற்பனை நடவடிக்கையை மேற்கொள்வதனால் எங்கள் வியாபாரம் பாதிக்கப்படுகின்றது.” – என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திருகோணமலை மத்திய சந்தை கட்டடத் தொகுதி வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

திருகோணமலை நகர சபை செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் இதன்போது அவர்கள் கையளித்தனர்.

நூற்றுக்கணக்கான வியாபாரிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். இதனால் வியாபார நடவடிக்கைகள் ஒரு சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.









# முல்லைத்தீவு மாவட்ட திறந்தமட்ட பூப்பந்தாட்டப் போட்டி

முல்லைத்தீவு மாவட்ட திறந்த நிலை பூப்பந்துப் போட்டி, மாவட்ட பூப்பந்து விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கனடியத் தமிழர் பேரவையின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்டம் முழுவதிலும் உள்ள இளம் விளையாட்டு வீரர்கள் ஒன்றிணைந்து, சிறப்பான திறமை மற்றும் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தினர்.


















## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில் பாம்பு...**

ஐயாத்துரை செல்வமகிந்தன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை மாடு கட்டச் சென்ற போது புடையன் பாம்பு தீண்டியுள்ளது. அதையடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**நாளை இலங்கைக்கு...**

இந்தியாவின் அயல்நாடுகளுக்கு முன்னுரிமைக் கொள்கையை மீள வலியுறுத்தும் இந்த விஜயமானது, கடல் மார்க்கமாக மிகவும் நெருக்கமான அயல் நாடாகவும் காலங்காலமாக நல்லுறவைக் கொண்ட நண்பனாகவும் உள்ள இலங்கைக்கு இந்தியாவினது தொடர்ச்சியான அர்ப்பணிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

அத்துடன், இணைப்புத் திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பரஸ்பர நன்மையளிக்கும் ஏனைய ஒத்துழைப்புகள் ஆகியவற்றுக்கும் இந்த விஜயம் மேலும் உத்வேகமளிக்கும். – என்றுள்ளது.



# கல்முனை முஸ்லிம் ம. வித்தியில் மாதிரி சித்திரைப் புத்தாண்டு விழா!

(நூருல் ஹுதா உமர்)

இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் தலைமையில் இடம் பெற்றது.

ஆரம்ப பிரிவு தலைவரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசனும், விசேட அதிதியாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.பாஸிலும், சிறப்பு அதிதியாக கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் பெண்கள் குற் றப்பிரிவு பொறுப்பதிகாரி பெண் பொலிஸ் பரிசோதகர் திருமதி. ஏ.எம்.எச்.சீ.



அபேரட்ணவும் கலந்து கொண் டனர்.

இந்த நிகழ்வின் மூலம் பௌத்த, இஸ்லாமிய, இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தவர்களின் கலை,கலாசாரங்கள், உடை மற்றும் உணவு வகைகள் என பல வகையான விடயங்களை மாணவர்கள் அறியக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதோடு பிற மதங்களை மதிக்கும் மனப்பாங்கையும் ஏற்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இவ்விழாவில் புத்தாண்டு விளையாட்டுக்களும், பல் மத உணவு வகைகளும் மாணவர்களால் பரிமாறப் பட்டன.போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் அதிதிக ளால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உயர்மன்றுக்கு இன்னும் வேண்டும்

பாலின சமத்துவச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக மோசமாக - கேவலமாக - உயர்நீதிமன்றத்தையே மலினப்படுத்தும் விதமாக - காட்டமாக - விமர்சித்தமை பெரும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக் கின்றது.

உயர்நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு, 'நீதித் துறையில் நரமாமிசம் உண்ணும் போக்கு' *(Judicial Cannibalism)* என்ற சாரப்பட படுகொச் சையாக விமர்சித்திருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அப்படி ஜனாதிபதி ஒருவர் நாடாளு மன்றத்தில் வைத்து உயர் நீதிமன்றத்தை விமர்சித்து, அது தொடர்பில் உயர்நீதிமன் றுக்கு எதிராக நடவடிகை எடுக்க முயல்வது 'அரசியலில் நரமாமிசம் புசிக்கும் போக்கு' *(Political Cannibalism)* என்ற சாரப்பட ஜனாதி பதியின் நடவடிக்கையை விமர்சித்து ஆங்கில நாளிதழ் ஒன்று இன்று ஆசிரியர் தலையங்கம் தீட்டி இருக்கின்றது.

சரியோ, பிழையோ இலங்கையின் மீயுயர் சட்டமான அரசமைப்புக்கு வியாக்கியானம் - பொருள் கோடல் - செய்யும் பொறுப்பு உயர்நீதிமன்றுக்கு மட்டுமே உண்டு. நாட்டின் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதி பதிக்குக் கூட அந்த அதிகாரம் - நியாயாதிக்கம் - வழங்கப்படவில்லை.

அப்படி இருக்கையில், உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் ஆயம் ஒன்றினது அரசமைப்புப் பொருள் கோடலை ஒட்டிய முடிவை மீறி, அதைத் தவறு என்று விமர்சிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் கிடையாது.

எனினும், அவர் நாடாளுமன்றத்தில் அந்த உரையை ஆற்றியமையினாலும், ஜனாதிபதி என்ற முறையில் அவருக்குள்ள சிறப்புரிமை அதிகாரங்கள் காரணமாகவும், இவ்விட யத்தில் இத்தகைய மோசமான விமர்சனங் களைப் பார்த்திருப்பதை தவிர, நீதித்துறைக் கும் மக்களுக்கும் வேறு வழி இல்லை.

இத்தகைய போக்கை முன்னுதாரணமாக தொடர விட்டால், இனிமேல் நாடாளுமன் றத்தில் இருந்து வரும் அனைத்துச் சட்ட மூலங்களையும் பரிசீலனைக்கு எடுத்து, ஆராய்ந்து, அது தொடர்பாகப் பரிந்துரைக்க முன்னர், இவ்விடத்தில் வெளிப்படையான - நீதியான - பரிந்துரையை செய்தால், அது ஜனாதிபதியையும் அவரது அரசையும் சீற்றத் துக்குள்ளாக்குமா, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் அரசு அதன் மூலம் தங்களின் பரிந்துரை தொடர்பில் தெரிவுக் குழு அமைத்து, விசா ரித்து, குளறுபடி பண்ணுமா என்றெல்லாம் உயர்நீதிமன்ற ஆயம் சிந்திக்க வேண்டிய சூழல் கூட ஏற்படும்.

ஆயினும் இத்தகைய நிலைமைக்கு, சட் டத்தை வெறும் சட்டமாக மட்டும் நோக்கிய உயர்நீதிமன்றத்தின் பின்னடைவான பார்வையும் காரணம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

இணைய பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த சிபாரிசுகளை புறமொதுக்கிவிட்டு - தூக்கிக் கடாசி விட்டு - அந்தச் சட்டமூலம் நிறைவேறியதாக சபா நாயகர் அந்த சட்டத்தின் மூலத்தின் மீது ஒப்பமிடுகின்றார்.

அந்தச் சட்ட மூலம் தொடர்பில் உயர்நீதி மன்றம் வழங்கிய பரிந்துரைகளை முழு அளவில் கவனத்தில் எடுத்து, அதற்கேற்ப உரிய திருத்தங்கள் செய்யப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தமது பொறுப்பை சபாநாயகர் நிறைவு செய்யாமல் அதில் பெரும் தவறிழைத்து, அந்தச் சட்ட மூலத்தில் ஒப்பமிட்டு, அது நிறைவேறியதாக அறிவித்தார். அது பற்றி விவரமாக முறை யிடப்பட்டும், அதைக் கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றம் தவறிவிட்டது.

ஒரு சட்டமூலத்தில் அது நிறைவேறியதாக சபாநாயகர் ஒப்பமிட்டால் அதன் பின்னர் அந்தச் சட்டமூலத்தை கேள்விக்கு உட்படுத்த முடியாது என்ற அரசமைப்பு உறுப்புரையை, அது ஏன் அரசமைப்பில் உள்ளது என்ற கருத்தை உள்வாங்காமல், இணையப் பாதுகாப்புச் சட்ட விடயத்தில், அதைக் கார ணமாகக் காட்டி, இழைக்கப்பட்ட தவறை நிவர்த்திக்க வழி செய்யாமல் மறுத்தமை மூலம் உயர்நீதிமன்றம் அந்தத் தவறான செயற்பாட்டுக்கு அனுமதித்து, பெரும் தவறிழைத்தது. இதன் மூலம் உயர் நீதிமன்றம் என்ன செய்திருக்கின்றது?

இனி, எந்தச் சட்டமூலத்தையும் தவறான வழியில் நிறைவேற்றி, அதில் சபாநாயகர் ஒப்பமிட்டு விட்டால் அதன் பின்னர் நாம் அதைச்சட்ட ரீதியில் - நீதியின் அடிப்படையில் - கேள்விக்கு உட்படுத்த மாட்டோம், உட் படுத்த முடியாது என்று உறுதிப்படுத்தி, அந்த நடைமுறையை அங்கீகரித்து இருக் கின்றது உயர்நீதிமன்றம்.

இந்தத் தீர்ப்பை முன்மாதிரியாக - காப்பாக கொண்டே - ஜனாதிபதியும் அவரது அரசும் இனி, எந்தச் சட்ட மூலத்தையும் உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையைக் குப்பையில் கடாசி விட்டு நிறைவேற்ற முடியும்.

தன் தலையில் தானே மண்ணள்ளிப் போடும் வேலையை அந்தத் தீர்ப்பு மூலம் செய்துள்ள உயர்நீதிமன்றம் அதனால் இதுபோல இன்னும் பல சோதனைகளை சந்திக்க போகின்றது என்பது நிச்சயம்.



# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப உபகரணம் வழங்கல்

(எம்.எம்.ஜெஸ்மின்)

சுயதொழில் முயற்சியாளர்களுக்கான புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதமர் மற்றும் வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் ஆகியோரது பங்கேற்புடன் இடம்பெற்றது.

உணவு மற்றும் போசணையைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணர்வத்தன மற்றும் வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுய தொழில் முயற்சியாளர்களுக்கான இலத்திரனியல் கோழிக் குஞ்சு பொறிக்கும் இயந்திரங்கள் மற்றும் கோழிக் குஞ்சுகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட், ராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் சமன்பிரிய ஹேரத், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, யூகே சுமித் உடுகும்புற , மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே குணரத்தின, மாவட்ட அரச அதிபர் ரத்நாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.







# மதுபானசாலைகளை உடைத்த சந்தேக நபருடன் மூவர் கைது!

(மஸ்கெலியா)

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஹட்டன், மஸ்கெலியா, கொட்டகலை ஆகிய பகுதிகளில் உள்ள மதுபான சாலைகளை உடைத்து மதுபான போத்தல்களை திருடிய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடப்பட்ட மதுபான போத்தல்களுடன் விற்பனை செய்த இரண்டு பெண்களும் அவர்களுள் அடங்குவர் என்று லிந்துல பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன், மஸ்கெலியா , கொட்டகலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மதுபானசாலைகளை நடு இரவில் உடைத்து மதுபான போத்தல்களையும் பணத்தை திருடிய பிரதான சந்தேக நபரை திம்புல, பத்தனை ஹட்டன் ஆகிய பொலிஸ் பிரிவில் உள்ள குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொட்டகலை நகரில் உள்ள மது பானசாலை ஒன்றை உடைத்து மதுபான போத்தல்களை திருடிய குற்றச்சாட்டில் ஹட்டன், அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் திம்புல பத்தனை பொலிஸாரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஹட்டன் பொலிஸாரின் குற்றப்புல னாய்வு பிரிவினர் சி.சி.டி.வி. காட்சிகள் ஊடாக விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்துக் ஹட்டன் பொலிஸார் குறிப்பிட்ட மதுபான சாலைகளில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் 41 மதுபான போத்தல்களை மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் திருடப்பட்ட மதுபான போத்தல்களை ஹட்டன் அளுத்கம பிரதேசத்தில் வசிக்கும் இரு பெண்களிடம் விற்பனைக்காக வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் இருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மதுபான போத்தல்களுடன் அந்தப் பெண்களையும் கைது செய்துள்ளனர் என்று ஹட்டன் திம்புல பத்தனை குற்ற தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சங்கத்தானை நாமகள் சிறுவர் சந்தை நிகழ்வு

(த.சுபேசன்)

சாவகச்சேரி – சங்கத்தானை நாமகள் முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது முன்பள்ளிச் சிறார்கள் சந்தை வியாபாரிகள் போன்று உடையணிந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

சிறுவர் சந்தையில் பெற்றோர்கள், அயலவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு சிறார்களது சந்தைப் பொருள்களை ஆர்வமாகக் கொள்வனவு செய்திருந்தனர்.









# திருகோணமலை செல்வநாயகபுரத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம், எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன் தினம் (17) திறந்து வைத்து மக்கள் பாவனைக்குக் கையளித்தார். இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கொண்டையன்கேணி கிராமத்துக்கான வரவேற்பு வளைவு அமைக்க அடிக்கல்!





(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு , கோறளைப் பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கொண்டையன்கேணி கிராமத்துக்கான வரவேற்பு வளைவுக் கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா கிராம மட்ட அமைப்புக்களால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பிரத்தியேக நிதிப் பங்களிப்பின் ஊடாகவும் கொண்டையன்கேணி மக்களின் நிதிப் பங்களிப்பின் ஊடாகவும் இந்தக் கிராமத்துக்கான வரவேற்பு வளைவுக் கோபுரமானது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் கோறளைப் பற்று பிரதேச சபைச் செயலாளர் நவநீதன், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளர் தம்பிராஜா தஜீவரன் உட்பட கிராம மட்ட அமைப்புகளின் நிர்வாகிகள், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அகில இலங்கை ரீதியில் முதல்தர மாணவிக்கு மடிக்கணினியை வழங்கிய அமைச்சர் ஜீவன்!

(பொகவந்தலாவ)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற மாணவிக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் மடிக்கணினி ஒன்றை வழங்கி வைத்தார்.

கடந்த வருடம் (2023) நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பொறியியல் தொழில்நுட்பம் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்ற நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ கல்வி வலயத்துக்கு உட்பட்ட கிணிகத்தேன மத்திய கல்லூரின் மாணவி ஆ.சு. செஹானி நவோதயா வுக்கு மடிக்கணினி வழங்கி வைத்தார்.

கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தின் அமைச்சரின் அலுவலகத்துக்கு மாணவியை வரவழைத்து வாழ்த்துக் களைத் தெரிவித்ததோடு எதிர்காலத்தில் கல்வியிலும், தொழில்நுட்ப பிரிவிலும் சிறந்து விளங்க தனது ஒத்துழைப்பையும் வழங்குவதாக அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

விஷேடமாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஜனாதிபதிக்குத் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பை ஏற்படுத்தி மாணவியுடன் உரையாட வசதி செய்து கொடுத்தார். இதன்போது ஜனாதிபதி, செஹானி நவோதயாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



# மக்கேசேர் விளையாட்டு மைதான பணியை ஆரம்பிப்பதற்குத் திட்டம்

(ஹஸ்பர்)

தொல்பொருள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ள திருகோணமலை மக்கேசேர் விளையாட்டு மைதான அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பாகத் திருகோணமலை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் இணைந்து திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த மைதானத்தைச் சகல வசதிகளும் கொண்ட சர்வதேச தர விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.





# சுவாமி விபுலானந்தர் பிறந்த வீட்டுக்கு சென்றது சந்நிதி பாதயாத்திரைக் குழு!

(வி.ரி. சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு இல்லத்தை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து சந்நிதி – கதிர்காம பாதயாத்திரை குழுவினர் தரிசித்தனர்.

பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயா வேல்சாமி திருவுருவச்சிலைக்கு அருகில் தமது பிரதானவேலை வைத்து வணங்கினார்.

பின்னர் பஞ்சாராத்தி காட்டி ஆராதனையில் ஈடுபட்டார்கள்.

சுவாமியை பிறந்த இல்லத்தை பார்வையிட்டு சில நிமிட நேரம் மணிமண்டபத்தில் தரித்து சென்றார்கள்.



# ஆளுநர் விடுத்த உத்தரவின் பேரில் காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறப்பு!

## அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகராஜன் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் உத்தரவின் பேரில் கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.ஜெகராஜன் தெரிவித்தார்.

இந்த அறிவித்தலை அடுத்து நாளை (20) வியாழக்கிழமை லாகுகல பிரதேச செயலகத்தில் நடைபெறவிருந்த பாத யாத்திரை தொடர்பான கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



ஆளுநர் அலுவலகத்தில் இருந்து இன்று (19) எமக்கு உத்தியோக பூர்வ கடிதம் கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் செயலாளர் மதநாயக்க அனுப்பி வைத்த அந்தக் கடிதத்தின் பிரகாரம் காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும். அதில் ஆளுநர் கலந்து கொள்ளவுள்ளார். அதற்கான ஏற்பாடு களை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

காட்டுப் பாதை திறப்பதில் முன்னொருபோதும் இல்லாத வகையில் சர்ச்சை நிலவியது. இருந்த போதிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்தச் சர்ச்சையை நீக்கி உத்தியோக பூர்வமாக அறிவித் துள்ளார். எனவே அடியார்கள் அந்தத் திகதியை மையமாக வைத்துச் செயற் படுமாறு வேண்டுகிறேன்.– என்றார்.

# பழுதடைந்த நிலையில் பாதைப் படகு அச்சத்தின் மத்தியில் பயணிக்கும் மக்கள்!



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அம்பிளாந்துறை கிராமத்தையும் மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தையும் இணைக்கும் பிரதான போக்குவரத்து மார்க்கமாக பயன்படுத் தப்படும் பாதைப் படகு நாற்புறமும் துருப்பிடித்து , அடிப்பாகத்தில் பாரிய துவாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தப் படகுப் பாதை தற்போது பாவனைக்கு உதவாத நிலையிலேயே உள்ளது. துவாரங்களின் ஊடாக ஆற்று நீர் பாதைக்குள் உட்புகுந்த வண்ணம் உள்ளது.

தினமும் பாதைப் படகுக்குள் இருக்கும் நீரை வெளியேற்றிய பின்னரே பயணத்தைத் தொடர வேண்டி உள்ளது.

எந்நேரமும் பாதைப் படகு நீரில் அமிழ்ந்து விடும் நிலைமையே காணப் படுகிறது.

இந்த நிலையில் பொது மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிப்பது யார்? இந்த அவலத்தை தீர்ப்பது யார்? என்று பொது மக்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

இப்போக்குவரத்து மார்க்கத்தினூ டாக தினமும் விவசாயிகள், ஆசிரி யர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள், வியாபாரிகள், பொது மக்கள் எனப் பலர் பயணம் செய்து வருகின்றனர்.

இதில் பயணிக்கும் பொதுமக்கள் தினமும் மிகவும் அச்சத்துடன், உயி ரைக் கையில் பிடித்துக் கொண்டு பய ணிக்கின்றனர் என்று கவலை தெரி வித்தனர்.

இதேவேளை எதிர்பாராமல் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாப் பகுதியில் இடம்பெற்ற பாதைப்படகு விபத்தின் பின்னர் பாதுகாப்பான பயணத்துக்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு மேலங்கியைத் தற்போது மக்கள் எவரும் அணியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் பாதையைப் புனரமைத்துப் பாதுகாப்பான பயணத் துக்கு ஏற்பாடு செய்து தருமாறு பொது மக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதும் இதுவரை எந்த வித நட வடிக்கையும் மேற்கொள்ளபடவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொறுப்புக் கூறவல்ல அதிகாரிகள் தாமதிக்காமல் புதிய படகுப் பாதையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அல்லது பாவனையில் உள்ள படகுப் பாதையைத் திருத்தி அமைத்து, நவீன முறைப்படுத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.







# கற்பிட்டியில் வெகு விமர்சையாக இடம்பெற்ற பாரம்பரிய ஹஜ்ஜுப் பெருநாள் விளையாட்டு!

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி சீ லையன்ஸ் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த ஹஜ்ஜுப் பெருநாள் பாரம்பரிய விளையாட்டு விழாவும் மாபெரும் படகு ஓட்டப் போட்டியும் நேற்று செவ்வாய்க்கிழமை (18) கற்பிட்டி வன்னிமுந்தல் கடற்கரையில் சீ லையன்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஏ.எம் அன்பாஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டியின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். என் சொயிஷா , கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்யூ.எஸ். எதிரிசிங்க கற்பிட்டி விஜயா கடற்படை முகாம் உத்தியோகத்தர் ரத்நாயக்க மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







கற்பிட்டியில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் பாரம்பரிய விளையாட்டு விழாவின் போட்டி நிகழ்ச்சிகளில் சிறுவர் முதல் பெரியவர் வரை சகலரும் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு வெற்றி பெற்று பெறுமதியான பரிசுப் பொருள்களையும் , பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர். அத்தோடு சுமார் 10 இற்கும் மேற்பட்ட எஞ்சின் வலுக்களை கொண்ட படகு ஓட்டப் போட்டிகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. போட்டிகளை பார்வை யிடுவதற்குப் பெருந்திரளான பார்வையாளர்கள் சமூகமளித்திருந்தனர். புத்தளம் மாவட்டத்துக்கு வெளியில் இருந்தும் பல படகுகள் கற்பிட்டியில் இடம்பெற்ற படகு போட்டிக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பெண்கள் வலுவூட்டல் நிகழ்வுகள்

**(மன்னார்)**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இன்று (19) 'பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா' எனும் கருப்பொருளில் மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள் இடம் பெற்றது.

டிலாசால் கல்லூரி மைதானத்தில் இன்று (19) நடைபெற்ற யோகா நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், நானாட்டான் டிலாசால் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் மனோ, நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இடம் பெற்ற யோகா நிகழ்வில் பாடசாலையின் மாணவ, மாணவிகள்ஃ ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நானாட்டான் சிவராஜா இந்து பாடசாலைக்கு இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.





# கர்நாடக மாநிலத்தில் குளிர்பானங்களைத் தயாரிக்கும் நிறுவனத்தில் முரளிதரன் ரூ. 1,400 கோடி முதலீடு!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் இந்தியப் பணத்தில் 1,400 கோடி ரூபாவை (இலங்கைப் பணத்தில் சுமார் ஐயாயிரம் கோடி ரூபாவை) கர்நாடகத்தில் உள்ள குளிர்பானங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் முதலீடு செய்யவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் முத்தையா முரளிதரன், கர்நாடகத்தின் சாமராஜநகரா மாவட்டத்தில் உள்ள படனகுப்பேயில் குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் ரூ.1,400 கோடி முதலீடு செய்யவுள்ளார் எனக் கர்நாடக தொழில்துறை அமைச்சரும், எம்பியுமான பாட்டீல் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இந்தத் திட்டம் பற்றி அமைச்சர் பாட்டீலுடன் முத்தையா முரளிதரனுடன் கலந்துரையாடினார். இதுகுறித்து அமைச்சரின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முரளிதரன், 'முத்தையா குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள்' (Muttiah Beverages and Confectioneries) என்ற பிராண்டின் கீழ் பானங்கள் மற்றும் தின்பண்டங்களை தயாரிக்கும் நிறுவனம் அமைக்க திட்டமிட்டுள்ளார். முதலில் ரூ.230 கோடி முதலீட்டில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம், தற்போது மொத்தம் ரூ.1,000 கோடியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் ரூ.1,400 கோடியாக உயர்த்தப்படும். இந்தத் திட்டத்திற்காக ஏற்கனவே 46 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. உற்பத்தி நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முத்தையா முரளிதரன் வரும் காலங்களில் தார்வாட்டில் மற்றொரு பிரிவையும் நிறுவத் திட்டமிட்டுள்ளார் எனவும் பாட்டீல் தெரிவித்தார்.

# ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் விக்கிரவாண்டியில் வெற்றி பெறுவோம்

## அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் பொன்முடி






விக்கிரவாண்டி,ஜூன்19

விக்கிரவாண்டி தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் ஜூலை 10-ந் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 14 ஆம் தி தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது. பா.ம.க. சார்பில் சி. அண்பு மணி போட்டியிடுகிறார் எனவும் அறிவிப்பு வெளியானது. இத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிப்பதாக அக்கட்சி தலைமை அறிவித்தது.

இந்நிலையில் தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அன்னியூர் சிவா இன்று காலை 11 மணிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகரிடம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். அப்போது, அமைச்சர் பொன்முடி, ஜெகத்ரட்சகன் எம்.பி., மாவட்ட பொறுப்பாளர் கவுதமசிகாமணி, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

வேட்பு மனு தாக்கல் செய்து விட்டு வெளியில் வந்த பின்னர் அமைச்சர் பொன்முடி கூறுகையில், கடந்த தேர்தலில் இந்த தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் புகழேந்தி வெற்றி பெற்றார். அப்போது, அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க. போன்ற கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடது. அந்த நேரத்திலேயே 9 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்றது.

தற்போது, பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. போட்டியிடுகின்றது. இவர்களுடன் அ.தி.மு.க. இல்லை. எனவே, தி.மு.க. வேட்பாளர் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

- இவ்வாறு அவர் கூறினார்.





# ஜனாதிபதி புடினுக்கு வட கொரியாவில் பெரும் வரவேற்பு!



ரஷ்ய அதிபர் புடின் வடகொரியாவுக்கு இன்று காலை (அந்நாட்டு உள்ளூர் நேரப்படி) சென்று சேர்ந்துள்ளார்.

24 ஆண்டுகளில் முதன்முறையாக ரஷ்ய அதிபரின் இந்த வடகொரிய பயணம் அமைந்துள்ளது.

அவரை அந்நாட்டு தலைவர் கிம் ஜாங் அன்னை நேரில் விமான நிலையத்துக்கு வந்து வரவேற்றார்.

2022ஆம் ஆண்டு உக்ரைன் மீது படை யெடுத்த பின்னர், வெளிநாட்டுக்கு புடின் மேற்கொள்ளும் அரிய சுற்றுப்பயணம் இதுவாகும்.

இதேபோன்று, கொரோனா பெருந்தொற்றுக்கு பின்னர், மற்றொரு உலக தலைவரை இதுவரை கிம் அழைத்து பேசியதில்லை. இந்த சூழலில் இவர்களின் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறும் எனக் கூறப்படுகிறது.

உக்ரைன் மீது நடத்தப்படும் போரில் வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை பெற வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு உள்ளது. அந்த வகையிலும் புடினின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பரில், வடகொரியாவுக்கு வரும்படி புதினை கிம் அழைத்திருந்த நிலையில், புடினின் இந்த பயணம் அமைந்துள்ளது. கடைசியாக, 2000 ஆம் ஆண்டு ஜூலையில், வடகொரியாவுக்கு புடின் பயணம் மேற்கொண்டார்.

இந்த பயணம், இரு நாடுகளின் நட்புறவை ஆழப்படுத்தும் வகையில் இருக்கும் என்று கூறப்படுகிறது. இரு நாட்டு தலைவர்களும் புதிய ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட திட்டமிட்டு உள்ளனர் என்று புதினின் உதவியாளர் யூரி உஷாகோவ், கடந்த திங்கட்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறினார்.

# ஒரே பாலின திருமணங்களுக்கு தாய்லாந்தில் சட்ட அங்கீகாரம்!



பாங்கொக்,ஜூன்19

தாய்லாந்தில் ஒரே பாலின திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்க வகை செய்யும் திருமண சமத்துவப் பிரேரணை, நாடாளுமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்பு நிறைவேறியது. இதனை தொடர்ந்து செனட் சபையிலும் திருமண சமத்துவ மசோதா நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்திற்கு 130 பேர் ஆதரவாக வாக்களித்தனர். சிலர் வாக்களிக்காமல் வெளியேறினார். 4 பேர் எதிர்த்து வாக்களித்தனர். ஏற்கனவே, மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சபையில் கடந்த மார்ச் மாதம் இந்தப் பிரேரணை நிறைவேறியது. இதன்மூலம் விரைவில் தாய்லாந்தில் தன்பாலின திருமணம் சட்டப்பூர்வமாக இருக்கிறது.

இதன் மூலம் ஒரு ஆண் மற்றொரு ஆணையும், ஒரு பெண் மற்றொரு பெண்ணையும் திருமணம் செய்து கொள்ள முடியும். இந்தப் பிரேரணையை செனட் கமிட்டி ஆய்வு செய்யும். பின்னர் அது அரசமைப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

அதன்பின் மன்னரிடம் இருந்து ஒப்புதல் வழங்கப்பட்ட பின் அது சட்டமாக்கப்படும். இதன் மூலம் தன்பாலின திருமணத்தை சட்டப்பூர்வமாக்கும் முதல் தென்கிழக்கு ஆசிய நாடாக தாய்லாந்து விளங்கும்.

கனடா முரசு

பக்கங்கள் - 6

புதன்கிழமை 19/06/2024

## 13 ரஷ்யர்களுக்கு எதிராக தடை விதித்தது கனடா!

ஒன்ராறியோ, ஜூன் 19

13 ரஷ்யர்களுக்கு எதிராகக் கனடா தடை விதித்துள்ளது.

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரின் மரணத்துடன் C2

# தமிழ் சமூக மையத்திற்கான நிதி திரட்டும் பணி ஆரம்பம்



ஒன்ராறியோ, ஜூன் 19

டொரன்டோவில் நிர்மாணிக்கப்படவுள்ள தமிழ் சமூக மையத்திற்கான நிதி திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக 'குடும்ப நன்கொடைத் திட்டம்' என்ற திட்டம் ஒன்றை தமிழ் சமூக மையம் அறிவித்துள்ளது. C2

# எதிர்காலத் திட்டங்களை வரையறுப்பதற்கு கனடியத் தமிழர் பேரவையின் வியூக அமர்வு

**ஒன்ராறியோ, ஜூன் 19**

**எதிர்காலத் திட்டத்தை வரையறுக்க வியூக அமர்வு ஒன்றை நிகழ்த்தியிருந்ததாக கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**'டொராண்டோ, ஜூன் 17, 2024 அன்று - கனேடிய தமிழர் பேரவை (CTC) அதன் உறுப்பினர்கள், இயக்குநர்கள் குழு மற்றும் ஆலோசகர்களை ஒன்றிணைத்து ஒரு முழு நாள் அமர்வை சனிக்கிழமை அன்று நடத்தியிருந்தது. கனடிய தமிழர் பேரவையின் அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்பான திட்டமிடலை மேற்கொள்வதற்கான வியூகங்களை உருவாக்கும் ஓர் அமர்வாக இது அமைந்திருந்தது.**

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

இந்த அமர்வு அர்ப்பணிப்புள்ள சமூக உறுப்பினர்களால் மிகவும் விரிவான முறையில் தொகுக்கப்பட்டிருந்ததோடு பலம், பலவீனங்கள், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவை குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

இந்த கலந்துரையாடல்கள் கனடா மற்றும் இலங்கையில் CTC இன் பங்கை அடையாளம் கண்டு முன்னுரிமை அளிப்பதோடு பரந்த கனேடிய தமிழ் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான பயனுள்ள வழிகளையும் ஆராய்வதில் கவனம் செலுத்தியிருந்தது.

இந்த அமர்வின் முக்கிய விவாத புள்ளிகள்:

– கனடா மற்றும் இலங்கை ஆகிய இரண்டிலும் CTC இன் பரிணாமப் பங்கு. C2

# மோடியைக் கொலைக் குற்றவாளியாக நிறுத்தி வான்கூவரில் நிஜ்ஜார் படுகொலை விசாரணை!


## 'பாவனை' நீதிமன்ற நடவடிக்கை அரங்கேற்றம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 19

சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதன் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக வான்கூவரில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திற்கு வெளியே செவ்வாய்க்கிழமை போலியான – கேலியான – கொலை வழக்கு விசாரணையை சீக்கிய ஆர்வலர்கள் நடத்தினர்.

பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட ஹோவ் ஸ்ட்ரீட்டின் ஒரு தொகுதியில், இந்தப் போலி விசாரணையில் நடிகர்கள் C2





## வெப்ப அலையால் கனடாவில் மின் விநியோகம் பாதிப்புறலாம்

கனடாவில் மின்சாரம் தடைப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக கனேடிய காலநிலை நிறுவனம் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மத்திய கனடாவில் கடுமையான வெப்ப அலை தாக்கி வரும் நிலையில், மின்சாரக் கட்டமைப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் ஒன்றாறியோ மற்றும் கியூபெக் வலயங்களில் வெப்ப அலை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வெப்ப அலைகளினால் மின்சார கட்டமைப்புக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்மாற்றிகள் போன்றன அதிக வெப்பம் காரணமாக பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரொறன்ரோவில் காற்றின் தரம் மாறுபடலாம் என எச்சரிக்கை

கனடாவின் ரொறன்ரோவில் காற்றின் தரம் குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடுமையான வெப்பநிலை காரணமாக காற்றின் தரத்தில் மாறுபாடு ஏற்படக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.


கனடிய சுற்றாடல் திணைக் களம் இது தொடர்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

காற்று மாசடைதல் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் மட்டுமன்றி ஒன்றாரியோவின் ஏனைய பகுதி களிலும் காற்றின் தரத்தில் மாற றங்கள் ஏற்படும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

நுரையீரல் தொடர்பான உபா தைகள் மற்றும் ஆஸ்துமா நிலைமைகளினால் பாதிக்கப் பட்டவர்கள் மிகவும் அவதான மாக இருக்க வேண்டுமென அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

காற்று மாசடைதல் காரண மாக உடல் நிலை பாதிக்கப்படக் கூடிய அபாயங்கள் காணப்படுவ தாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.



### மோடியை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சுருள் வெள்ளை நிற விக் அணிந்த நீதிபதி அடங்கியிருந்தார். அவர் 'வழக்குத் தொடுநரை' வழக்கை முன்வைக்க அழைத்தார்,

இந்த போலி விசாரணை தொடங்கும் முன், மோடியின் உருவப் படம், சிறைச் சீருடைகளுடன், ஒரு தற்காலிக கூண்டில் தெருவில் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது.

இந்தியாவில் சுதந்திரமான சீக்கிய மாநிலம் அமைப்பது தொடர்பான வெளிநாட்டு வாக்கெடுப்பின் முக்கிய அமைப்பாளரான நிஜ்ஜார், கடந்த ஆண்டு ஜுன் 18 அன்று அவர் தலைவ ராக இருந்த சர்ரே கோவிலின் வாகன நிறுத்துமிடத்தில் வைத்து சுட்டுக் கொல் லப்பட்டார்.

நிஜாரின் மரணத்தை இந்திய அரசாங் கத்துடன் தொடர்புபடுத்தும் நம்பகமான உளவுத் தகவல்கள் இருப்பதாக பிரத மர் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் தெரி வித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தமிழ் சமூக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பம் ஒன்று தலா 10,000 கனடிய டொலர்களை வழங்குவதன் மூலம் இந்த நன்கொடைத் திட்டத்திற்கு பங்களிக்க லாம் என தமிழ் சமூக மையம் தனது இணையத் தளத்திலும், சமூக ஊடகப் பக்கங்களிலும் அறிவித்துள்ளது.

10,000 கனடிய டொலர்களை வழங்கக் கூடிய 2,500 குடும்பங்களை அடையாளங் கண்டு, அவர்களிடமிருந்து நன்கொடையைப் பெறுவதே இந்த திட் டத்தின் இலக்காக இருக்கின்றது.

இது குறித்து தமிழ் சமூக மையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

'தமிழ் சமூக மைய கட்டுமானத்தை ஆரம்பிப்பதற்கான குடும்ப நன்கொடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் சமூக மைய கட்டுமானத்தை ஆரம்பிப்பதற்காக 'விழுதுகளாக' அடையாளப்படுத்தப்படும் நிறுவுனர் குடும்பங்களிடம் இருந்து முதல் கட்ட நன்கொடைகளை பெற்றுக்கொள்ள தமிழ் சமூக மையம் திட்டமிட்டுள்ளது.

இதில் இணையும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சமூக மையத்தை உருவாக்குவதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 டொலரை நன் கொடையாக வழங்க முடியும்.

இந்த நன்கொடையளிப்பின் மூலமாக 2,500 குடும்பங்களை இணைத்து அதன் மூலமாக 25,000,000 டொலரை பெற்றுக் கொள்வதற்கு தமிழ் சமூக மையம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிதிப்பங்களிப்பின் மூலமாக தமிழ் சமூக மையத்தின் நிகழ்வரங்கத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் நீங்கள் இணைந்து உங்கள் பங்களிப்பினை வழங்குவதற்கு இந்த இணைப்பினை (https://tamilcentre.ca/ta/family-giving-donation/) சொடுக்கவும்.

தமிழ் சமூக மையம் குறித்த மேல திக விவரங்களையும் கட்டுமான நடவ டிக்கைகளின் தகவல்களை பெற்றுக் கொள்ளவும் எமது புதிய இணைத்தளத் தினை பார்வையிடுங்கள்

http://www.tamilcentre.ca/

### எதிர்காலத் திட்டங்களை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

– கனடிய தமிழ் சமூகத்துடன் பரந்த ஈடுபாட்டிற்கான உத்திகள்.

– அமைப்பு மற்றும் சமூகம் எதிர் கொள்ளும் சவால்கள்.

இந்த அமர்வைத் தொடர்ந்து, கனே டிய தமிழ் சமூகத்தின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளை நன்கு புரிந்து கொள்வதற்காக CTC ஒரு விரிவான பொது அறிவுரை கோரலை நடத்த வுள்ளது.

இந்த ஆலோசனை செயல்முறை யானது தமிழ் சமூகத்தின் பலதரப்பட்ட எண்ணங்களையும் தேவைகளையும் CTC இன் செயற்திட்டங்களில் திறம் பட பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.

கனேடிய தமிழ் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒருங்கிணைந் ததும்உள்ளடக்கியதுமானசூழலைவளர்ப் பதற்கு CTC உறுதிபூண்டுள்ளது. இந்த அமர்வின் போது கிடைக்கப்பெற்ற பரிந் துரைகள் ஊவூஊ கு அதன் தாக்கத்தை வலுப்படுத்தவும், அதன் செயல்பாடுகள் சமூகத்தின் தேவைகளுடனும் அபி லாஷைகளுடனும் ஒத்துப்போவதை உறுதி செய்யவும் உதவும்.

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: 416-240-0078

mailto:info@canadiantamilcongress.ca

### 13 ரஷ்யர்களுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய குற்றத்திற்காக இந்தத் தடையை கனடா அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவ்லானி, கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி சிறைச்சாலையில் மரணமடைந்தார்.

இவர் பொய்யான குற்றச்சாட்டுகளில் சிறை பிடிக்கப்பட்டார் எனக் கனடா கருது கிறது.

அலெக்ஸி நவ்லானியின் மனைவி யுலியா நவால்னயா கனடாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் இந்தப் புதிய தடை அறிவித்தல் வெளியாகி யுள்ளது.

தனது பயணத்தின் போது பிரத மர் ஜஸ்டின் ட்ரூடோ, வெளிவிவ கார அமைச்சர் மெலானி ஜோலி ஆகி யோரை அவர் சந்திக்க ஏற்பாடாகி யுள்ளது.

கனடாவில் புதிதாக தடை உத்தரவு அறிவிக்கப்பட்டவர்கள் உளவுத்துறை, மற்றும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது

அலெக்ஸி நவ்லானி இறந்த இரண்டு வாரங்களுக்குள் ஆறு ரஷ்யர்களுக்கு எதிராகக் கனடா தடை அறிவித்தலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அலெக்ஸி நவ்லானி யின் மரணம் குறித்த குற்றச்சாட்டுகளை ரஷ்யா மறுத்துள்ளது.

# ஒரு புறம் அதிக வெப்பநிலை மறுபுறத்தில் இடியுடன் மழை




## தென் ஒன்ராரியோவின் இன்றைய காலநிலை இது

ஒன்ராரியோ, ஜூன் 19

கனடாவின் பேரேரிகள் மீது தொடர்ந்து வெப்பக் குவிமாடம் நிலை கொண்டிருப்பதால், அதிக வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் என்பன ஒன்ராரியோவின் தென்பகுதியில் இன்று இடியுடன் கூடிய மற்றொரு மழைக்கு வாய்ப்பைத் தூண்டும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஒன்ராரியோவின் தென்பகுதியில் மிகவும் ஈரமான மற்றும் ஈரப்பதமான காற்று நிறை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டல நிலை புதன்கிழமை ஒரு ஸ்திரமற்ற நிலையில் இருக்கும் எனவும், கூடுதல் இடியுடன் கூடிய செயல்பாடு நாள் முழுவதும் சாத்தியமாகும் எனவும், மதியம் வரை புயல்கள் உருவாகும் நிலை உள்ளதாகவும் எதிர்வு கூறப்படுகின்றது.

அவை பலனளிக்கும் பட்சத்தில், சில இடங்களில் இடியுடன் கூடிய மழைப்பொழிவு அச்சுறுத்தல் மற்றும் உள்நாட்டில் பலத்த காற்றின் காரணமாக அது கடுமையானதாக மாறலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## மெக்கில் பல்கலை போராட்டக்காரர்களுடன் பேச்சுகளை முடிப்பதாக நிர்வாகம் அறிவிப்பு

கியூபெக், ஜூன் 19

மெக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரம் அமைத்துள்ள பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்வதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தக் கூடாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதில் மெக்கில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து விலக்கப்படலும் உள்ளடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பல்கலைக்கழக நிர்வாகம் தமது குரல்களை மௌனிக்கச் செய்ய இவ்வாறு முயற்சிப்பதாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முனைந்த போதிலும், அவர்கள் தமது நிபந்தனைகள் பேரம்பேசப்பட முடியாது என்ற எண்ணத்துடன் இருக்கின்றனர் எனப் பல்கலைக்கழக நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.




## ஒன்றாரியோவில் வகுப்பறையில் கற்கின்ற மாணவர்களுக்கு வெப்பப் பாதிப்பு நேரலாம்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வெப்ப நிலை காரணமாக மாணவர்கள் பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் வெப்ப அலை நிலவி வரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் வெப்ப அலை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டொரன்டோ உள்ளிட்ட ஒன்றாரியோ மாகாணத்தின் அனேக பகுதிகளில் கடுமையான வெப்பநிலை நீடித்து வருகின்றது.

வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்களும் வயோதிபர்களும், பாதிப்புகளை எதிர் நோக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வகுப்பறைகளில் கற்கும் மாணவர்கள் அதிக அளவில் வெப்பநிலையினால் பாதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மின்விசிறிகள் மூலம் இந்த வெப்பநிலையினால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கட்டுப்படுத்த முடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் காற்றுச் சீராக்கிகள் காணப்பட்ட போதிலும் பல பாடசாலைகளில் மின்விசிறிகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவி வரும் வெப்பநிலை காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படக் கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்களின் மீது வான்கூவர் பொலிஸ் எல்லை மீறல் நடவடிக்கை

## சிவில் விடுதலைகள் அமைப்பு முறைப்பாடு செய்கிறது

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன் 19 பலஸ்தீன ஆதரவுப் போராட்டக் காரர்கள் மீது வான்கூவர் பொலிஸ் திணைக்களம் அளவுக்கதிகமான பலத்தை பிரயோகித்ததாக கூறி பிரிட்டிஷ் கொலம்பிய சிவில் விடுதலைகள் அமைப்பு முறைப்பாடு செய்யவுள்ளது.

இது தொடர்பில் வான்கூவர் பொலிஸ் திணைக்களத்தின் மேற்பார்வை குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வான்கூவரின் கிழக்குப் பகுதியில் ரயிலை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் 14 பேர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸாரின் செயற்பாடுகள் 'பயங்கரமாக' இருந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளியே தெரியாத வறுமையின் பிடியில் நான்கில் ஒரு கனடியர்!

## வறியோர் எண்ணிக்கையில் எதிர்பார்த்ததை விட அதிகமாம்




கனடாவில் வறியவர்கள் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக நினைத்ததை விடவும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் வறுமையில் வாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய உணவு வங்கிகளின் அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

25 வீதமான கனடியர்கள் வெளியே புலப்படாத வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் வறியவர்களின் எண்ணிக்கை 10 வீதம் என அறிக்கையிட்டிருந்தது.

உண்மையில் வறியவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்து, பாதணிகள், புரதச்சத்து, விசேட வைபவங்கள், பரிசு பொருடள்கள், ஆடைகள், பற்சுகாதாரம், எதிர்பாராத செலவுகள் போன்ற காரணிகளின் அடிப்படையில் மக்களின் வறுமை நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான காரணிகளின் அடிப்படையில் கனடாவில் வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை மேலும் ஆறு மில்லியனாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருமானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வறுமை நிலையை தீர்மானிக்காது மக்களின் கொள்வனவு இயலுமை அடிப்படையில் வறுமை குறித்த தகவல்களை வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

18 முதல் 30 வயதானவர்களில் 30 வீதமானவர்களும் ஒற்றை பெற்றோரைக் கொண்ட குடும்பங்களில் 45 வீதமான குடும்பங்களும், வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களில் 42 வீதமானவர்களும் வறுமையில் வாடுகின்றனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஓரினக் காதல் படுகொலையில் முடிந்தது பொலிஸ் அதிகாரிக்கு 11 வருடச் சிறை!

சசகெச்சுவான், ஜுன் 19

இள வயதுடைய தமது ஆண் காதலனை கொலை செய்தமைக்காக கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரிக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

'ஒரு வழியில் இதனைக் கொலையாகப் பார்த்தாலும், மறு வழியில் இது தற்காப்புக்கானதாக இருக்கின்றது' என தமது தீர்ப்பில் சசகெச்சுவான் நீதிபதி கெரி மெஸ்கினிக் தெரிவித்துள்ளார்.

பிறேடன் ஹேர்மனுடனான தமது ஓரினக் காதல் வெளிப்பட்டு விடும் என்ற அச்சத்தால், பேர்னி ஹேர்மன் இந்த செயலை செய்துள்ளார் என நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அரச சட்டத்தரணிகள் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என வாதிட்டமையுடன், குற்றவாளி தரப்பு சட்டத்தரணிகள் நான்கு தொடக்கம் ஆறு வருடங்கள் வரையான சிறைத்தண்டனையை கோரியிருந்தனர்.

இந்த வழக்கில் பெர்னி ஹேர்மன், (வயது55) தமது காதலனான 26 வயதுடைய பிறேடன் ஹேர்மனைப் படுகொலை செய்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார். இருவருடைய பெயர்களிலும் ஒற்றுமை இருந்தாலும் இருவரும் உறவினர்கள் அல்லர்.

2018 இல் இருவரும் ஃபேஸ்புக்கில் சந்தித்தனர் எனக் கூறப்பட்டது.

விரைவில், பேர்னி ஹேர்மன் அந்த இளைஞனை தமது குடும்ப வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவர்களின் உறவு பாலியல் ரீதியாக மாறியது. அது பேர்னி ஹேர்மனின் திருமண வாழ்வைப் பாதிக்கத் தொடங்கியது.

அதிகாரியின் மனைவி 2019 இல் பிறேடன் ஹேர்மனை வீட்டை விட்டுத் துரத்தினார். ஆனால் இருவரும் உடலுறவுக்காக தொடர்ந்து சந்தித்தனர்.

மே 11, 2021 அன்று, பேர்னி ஹேர்மன் , பணியில் இல்லாதபோதும், சீருடையை அணிந்து, ஆர்.சி.எம்.பி.வழங்கிய ஆயுதத்தை ஏந்திக்கொண்டு, பிராடன் ஹேர்மனை அழைத்துக்கொண்டு பூங்காவிற்குச் சென்றார்.

அங்கு பின்னர் பிறேடன் ஹேர்மனின் உடல் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது.

# கனடாவில் 3 பிள்ளைகளுடன் தலைமறைவாகியுள்ள பெண்!



## கைது செய்யப் பிடிவிறாந்து பிறப்பிப்பு

கனடாவின் மானிட்டோபா பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது மூன்று மகன்களுடன் தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெண் கடந்த ஒரு மாத காலமாக காணாமல் போயிருந்து கண்டு பிடிக்கப்பட்டார் என்றும், அவர் மீண்டும் இப்போது காணாமல் போயுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெண் தனது பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு தலைமறைவாகியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் டர்ஹம் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

54 வயதான ஒன்றாரியோவின் கிளாரிங்டனைச் சேர்ந்த அஸ்ட்ரிட் சிச்ல்லர் என்ற பெண் இவ்வாறு தலைமறைவாகியுள்ளார்.

அந்தப் பெண்ணை கைது செய்வதற்கு பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளை கடத்தியமை மற்றும் நீதிமன்ற உத்தரவினை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த பெண்ணுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

12,11மற்றும்9வயதானஆண்பிள்ளைகள் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


அமெரிக்க கனடிய எல்லை பகுதியில் இந்தப் பெண், பிள்ளைகளுடன் இருந்தபோது அதிகாரிகள் அவரைக் கைது செய்திருந்தனர்.

பின்னர் இந்த பெண் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையில் வீட்டிலிருந்த பிள்ளைகளை மீண்டும் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த பெண் பிள்ளைகளை மீண்டும் கடத்திக் கொண்டு தலைமறைவாகி இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# போதைப்பொருள் கடத்தலில் தொடர்புபட்ட 92 பேர் ஒன்றாறியோவின் ஒஷாவாவில் கைது




கனேடிய மாகானமான ஒன்றாறியோ விலுள்ள ஒஷாவா நகரின் டர்ஹாம் பகுதி பொலிஸார், தாங்கள் போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் 92 பேரைக் கைது செய்துள்ளனர் எனவும், அவர்கள் மீது 113 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும், 600,000 டொலர்கள் மதிப்பிலான போதைப் பொருள்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனவும் தெரிவித் துள்ளார்கள்.

போதைப்பொருள்கள் மற்றும் ஆள் கடத்தல் தொடர்பில், ஐந்து வார விசாரணை ஒன்றிற்குப் பின் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என டர்ஹாம் பகுதி பொலிஸார் தெரிவித் துள்ளார்கள்.

ஒஷாவா மேயரான டன் கார்ட்டர், இந்த விசாரணை, நகரத்தில் வாழும் மக்களுக்கு ஒரு செய்தியை தெரி விப்பதாக கூறுகிறார். அதாவது, நீங் கள் எங்கள் நகருக்கு போதைப் பொருள்களை விற்பனை செய்ய வந் தால், உங்களுக்கு இங்கு வரவேற் பில்லை என்பதுதான் அது என்கிறார் அவர்.

கனடா, நாளொன்றிற்கு 24 பேரை போதைக்கு பலிகொடுப்பதாக தெரிவித் துள்ள டன் கார்ட்டர், இங்கே வீடற்ற, தங்க இடமில்லாத, எளிதில் பாதிக்கப் படும் அபாயத்தில் பலர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

அவர்களுக்காக நாம் கூடுதலாக முயற்சிகள் மேற்கொள்ளவேண்டி யுள்ளது. என்றாலும், இப்போது நாங் கள் மேற்கொண்டுள்ள இந்த நடவ டிக்கை, இந்த சமுதாயம் சட்டம், ஒழுங் கைப் பின்பற்றும் சமுதாயம் என்பதை உறுதிசெய்வதற்காக நாங்கள் எதை யும் செய்வோம் என்பதையும், இந்த சமுதாயம் போதைப்பொருள்கள் விற் பனையைச் சகித்துக்கொள்ளாது என்பதையும் காட்டுவதற்காகவே மேற் கொள்ளப்பட்டுள்ளது என்றார்.



# மிகவும் அரிய வகை சிவப்பு பாண்டா குட்டிகள் ரொறன்ரோ மிருகக்காட்சிச்சாலையில் பிறப்பு

ரொறன்ரோ மிருகக்காட்சிசாலை யில் மிகவும் அரிய வகை சிவப்பு பான்டா குட்டிகள் இரண்டு பிறந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகுரா என்ற பான்டாவிற்கு இந்த இரண்டு குட்டிகளும் பிறந்துள்ளன என மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

தாய் பான்டாவும் குட்டி பான்டாக் களும் தனித்து விடப்பட்டுள்ளன என வும் அவை கமரா மூலம் கண்காணிக் கப்படுகின்றன எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த இரண்டு பான்டா குட்டிகளை யும் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைவதாக மிருகக்காட்சிசாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொல்ப் டிஜொங் தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி இந்த இரண்டு பான்டாக் குட்டிகளும் மிருகக்காட்சி சாலையில் பிறந்தன என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இமயமலை மற்றும் தென் சீனாவை பூர்வீகமாகக் கொண்ட இந்த வகை பான்டாக்கள் மிகவும் அரிய வகை உயிரினங்கள் என்பது குறிப்பிடத்தக் கது.